
# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு



கதை தொகுப்பு

அடியேன்

கார்த்திகா சிவகுமார்

ரங்கராஜனுக்கும், எதிராஜனுக்கும் நடந்த உரையாடல்களை வேதாந்த தேசிகர் விவரிப்பதை இன்று அறியலாம்.

ரங்கராஜனுக்கும் - எதிராஜனுக்கும் நடந்த உரையாடலே இன்று ஜகத்தைக் காத்துக் கொண்டிருக்கிறது.

ஆக, ரங்கபதியும் - எதிபதியும் பேசிக்கொண்டு உமக்கு மோட்சம் கொடுத்துவிட்டேன் என்று ரங்கநாதர் சொன்னார். ஆனால், இராமானுஜரோ மோட்சம் கிடைத்துவிட்டதே என்று அமைதியாக இருக்கவில்லை. நாம் மோட்சம் பெற்றுக்கொண்டால் போதுமா? இந்த ஜகத்தில் உள்ளோர் மோட்சத்திற்குப் போகவேண்டாமா?

நம் சம்பந்த - சம்பந்திகள் அனைவரும், அடியார்கள் அனைவரும் இந்த மோட்சத்தை அடைய வேண்டுமே! இதனை மனதில் கொண்டு ரங்கராஜாவிடம் மொத்த பேருக்கும் நீர் மோட்சத்தைக் கொடுக்க வேண்டும்.

ரங்கராஜாவோ இராமானுஜரைப் பார்த்து, "நீர் சாமர்த்தியக்காரர் தான் இன்றைக்கு கேட்டுவிட்டால், பிராட்டியார் பக்கத்தில் இருப்பதனால் நான் மறுப்பு சொல்ல மாட்டேன், என்பதை நன்கு புரிந்து கொண்டு இந்த வரத்தைக் கேட்கின்றீரே!" என்றார்.

மோட்சத்தை நீர் கேட்டீர் நாம் கொடுத்தோம். ஆனால், யாரோ - எங்கோ - எப்பொழுது ஜகத்தில் பிறந்து வரப் போகிறார்களோ அத்தனை பேருக்குமா நான் மோட்சத்தைக் கொடுக்க வேண்டும்? என்றார் அரங்கன்.

மேலும், "சரி மோட்சத்தை அனைவருக்கும் கொடுத்தோம்" என்றார். இராமானுஜர் ஆனந்தமாகப் பெற்றுக் கொண்டார். அப்போ இராமானுஜரின் சம்பந்தம் நமக்கு இருந்துவிட்டது என்றால், முக்தி நிச்சயம் என்றாகிவிடுகிறது அல்லவா!

ஏனெனில், நம்பெருமாளே திருவாய் மலர்ந்து அருளியிருக்கிறார். உடையவர் என்ற பட்டத்தை இராமானுஜருக்குக் கொடுத்து, மோட்சம் கொடுக்கக்கூடிய சக்தியை உமக்குக் கொடுத்தோம் என்று பங்குனி உத்திரத்தன்று நம்பெருமாள் சொல்லிவிட்டார். அதையும் இராமானுஜர் பெற்றுக் கொண்டார்.

வேதாந்த தேசிகர் சொல்கிறார் - உம்மால் கொடுக்கப்பட்டதை நாங்கள் பெற்றுக் கொள்கிறோம். மோட்சமானது உம்மால் நம்பெருமாளிடம் எங்களுக்கு கிடைப்பது. உம்முடைய திருவடி சம்பந்தத்தை ப் பெற்றுக் கொண்டாலே போதும், எங்களுக்கு மோட்சம் கிடைத்துவிடும் என்கிறார்.

மணவாள மாமுனிகள் சொல்கிறார் - மணவாள மாமுனிகள் ஆர்த்திப் பிரபந்தத்தினுடைய கடைசி பாசுரத்தில் சொல்கிறார்.

ஆர்த்தி - என்றால் துடிப்பு. இராமானுஜரின் திருவடி சம்பந்தம் மூலமாக ஸ்ரீமந்நாராயணனை அடைந்து விட வேண்டும் என்ற துடிப்பு.

இராமானுஜரும் - நம்பெருமாளும் பேசிக்கொள்கிறார்கள். அடியார்களுக்கும் மோட்சம் வேண்டும் என்றார் இராமானுஜர். நம்பெருமாளோ அதையும் கொடுத்துவிட்டோம் என்று

அருளினார். அதன் பின் இராமானுஜர், பெருமாளிடம் 'மோட்சம் கேட்டேன் கொடுத்துவிட்டீர். மிச்சம் இருக்கும் வாழ்நாளை எப்படிக் கழிக்க வேண்டும்?' என்கிறார் இராமானுஜர்.

நம்பெருமாள் பதில் சொல்கிறார் :-

த்வய மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே இரு. ஸ்ரீரங்கத்திலேயே இரு.

ஆக, த்வயத்தை அர்த்தத்தோடு வாய்விடாமல் சொல்லி - மனனம் பண்ணிக் கொண்டே எப்போதும் த்வயத்தை உச்சரிக்கின்ற உதடுகளோடு, ஸ்ரீரங்கத்தை விட்டு வெளியே செல்லாமல் இரு என்கிறார் நம்பெருமாள்.

அதனால் தான் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஐம்பது வயது ஆனாலும் ஸ்ரீரங்கத்தில் சிறிய குடிசையிலாவது வாழ்ந்துவிட வேண்டும் என்று சொல்கிறார்கள் அல்லவா! இந்த வார்த்தைகள் தான் அதற்குக் காரணம். அந்த திருவரங்கம் என்ற தேசம், எதையும் பெற்றுக் கொடுக்கும். மோட்சத்தையும் பெற்றுக் கொடுக்கும். அதனால் தான் தத்யத்ரயம் சொல்லிக் கொண்டு சரணாகதி அடைந்து, மிச்சம் இருக்கும் நாளை திருவரங்கத்தில் கழிக்க வேண்டும். கண்டிப்பாக பெருமாள் நமக்கு முக்தியைக் கொடுக்கிறார். அந்த முக்தியும் அவனாகக் கொடுத்தது அல்ல. இராமானுஜர் பெற்றுக் கொடுத்தார்.

இராமானுஜர் திருவடியைப் பற்றிக் கொண்டதாலே, அவரது திருவடி சம்பந்தத்தை பெற்றதாலே நமக்கு 'முக்தி' கொடுக்கிறார். இது ஆர்த்திப்பிரபந்தத்திலே மணவாள மாமுனிகள் சொல்லியிருக்கும் ஸ்லோகத்தின் விளக்கமாகும்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

ஸ்ரீபாஷ்யத்தின் சில துளிகள் :-

உபநிஷத்துக்கள் நல்ல ஞானத்தைப் போதிக்கும். நல்ல ஞானத்தால் மட்டும் 'மோட்சம்' என்று சொன்னவர் அல்ல இராமானுஜர்.

ஞானம் கனிந்த நலம். ஞானமே முதிர்ந்து பக்தியாகிறது அல்ல. காயைப் போல ஞானம். பழத்தினைப் போல பக்தி. அந்த பக்தியினால் தான் மோட்சம் என்கிறார் இராமானுஜர்.

வெறும் ஞானத்தினால் மட்டும் மோட்சத்திற்கு செல்லமுடியுமா? பெருமாளுடைய திருவடிகளில் நினைந்த அன்பு நமக்கு வேண்டுமல்லவா! அந்த பகீரத ஞானத்தினால் தான் மோட்சம் என்று சாதிக்கிறார் இராமானுஜர். இதனைத் தான் ஸ்ரீபாஷ்யம் முதலான கிரந்தங்களில் தெரிவிக்கிறார் சுவாமி.

நிறைந்த சாத்திரம் கொண்டது "ஸ்ரீபாஷ்யம்" என்ற கிரந்தம். அதிலே நான்கு அத்தியாயங்கள். 16 பாபங்கள். 156 அதிகாரங்கள். 545 சூத்திரங்கள். இது பிரம்மசூத்திரத்திற்கு பாஷ்யமாக இருந்தது.

இந்த ஸ்ரீபாஷ்யத்தில் தன்னுடைய கருத்துக்கள் அத்தனையையும் வெளியிட்டார் சுவாமி

இராமானுஜர்.

ஸ்ரீபாஸ்யத்தில், இது தான் சாஸ்திரம் சொல்கிறது. சகட்டுமேனிக்கு எதனையும் சொல்லக் கூடாது. வேதத்தினை ஒப்புக்கொண்டு தவறான அர்த்தம் சொல்லக்கூடாது என்கிறார் சுவாமி.

இராமானுஜர் ஸ்ரீபாஷ்யத்திற்கு முதலில் உரை எழுதும் பொழுது, நான் ஒன்றும் வேதத்திற்குப் புறம்பாக எழுதவில்லை. பூர்வாச்சாரியார்கள் எல்லோரும் நன்றாக பிரம்ம சூத்திரத்திற்கு அர்த்தம் சொல்லி வைத்து விட்டார்கள். நான் என்ன செய்ய போகிறேன் தெரியுமா? அந்த பூர்வாச்சாரியார்கள் வகுத்துக் கொடுத்த பாதையிலே அவர்கள் சொன்ன செய்தி மாறாமல் அர்த்தத்தினை விளக்கமாகச் சொல்லப் போகிறேன். அதுதான் நான் செய்யப்போகிறேனே தவிர, இதற்கு புது விளக்கமே தேவைப்படாது.

என் அடியார்கள் ஆயிரம் - இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகும் பொழுது, புத்தி குறைந்து விட்டது. பழைய அர்த்தம் புரியுமா, புரியாதா? என்பது தெரியாது. ஆகையாலே, ஒரு குழந்தைக்கு எந்த இடத்தில் இருந்து, எப்படி உணவூட்ட வேண்டும் என்பது தாய்க்குத்தானே தெரியும். அந்த தாய் ஸ்தானத்தில் இருந்து தான் பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கவுரை சாதித்தார். இப்படித் ஸ்ரீபாஷ்யம் சாதித்தார் சுவாமி இராமானுஜர்.

இந்த ஸ்ரீபாஷ்யத்திலே "ஞானம் கனிந்த நலம் - உயர்வற உயர் நலம் உடையவன், மயர்வற மதிநலம் அருளினன்". நம்மாழ்வார் மதிநலம் என்று சாதித்தார். மதி என்றால் ஞானம். நலம் என்றால் பக்தி. ஞானமே முதிர்ந்து முதிர்ந்துதான் பக்தியாகும். அந்த பக்திரூபத்தினால் தான் மோட்சம். அதையே தான் வேதாந்த சாஸ்திரமும் சொல்லியது.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

🌷🌿🐋✿ ஞானம் கனிந்த நலம் :-

ஞானமே முதிர்ந்து முதிர்ந்து தான் பக்தியாகும். பக்தி ஒன்றினால் தான் மனிதன் பகவானை அடைய முடியும். அதற்கு ஓர் உதாரணம்.

இராமானுஜர் ஸ்ரீரங்கத்தின் வேதாந்தியல்லவா! வேதாந்திக்கு பெருமாளை எப்படியெல்லாம் பார்த்துக் கொள்வது என்ற எண்ணம் இருக்கும்.

ஒருமுறை ஸ்ரீரங்கத்து எம்பெருமானைச் சேவிக்கிறார் இராமானுஜர். பெருமாளைச் சேவிக்கும் பொழுது அரங்கனின் முகம் வாடி, ஜலதோசம் பிடித்தாற் போன்று இருந்தது. பெருமாளுக்கு ஜலதோசம் பிடித்து ஒரே இருமல், தும்மல்.

இதைக்கண்ட இராமானுஜருக்கு ஒரே வருத்தம். என்ன பெருமாளுக்கு இப்படி ஆயிற்றே. என்ன நடந்தது? என்பதை அறிய தன் சிஷ்யர்களை அழைத்தார் சுவாமி இராமானுஜர்.

பெருமாளுக்கு ஏதேனும் குளிர்ச்சியான நிவேதனம் ஏதும் சமர்ப்பித்தீரா? என்று கேட்டார். அனைத்து சீடர்களும் எனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்ல, கடைசியில் இராமானுஜர் பக்கத்தில் முதலியாண்டான் எழுந்தருளியிருந்தார்.

அவர் சொன்னார் 'அடியேன் தான் தத்யன்னம் சமர்ப்பித்தேன்' என்றார். தயிர் பிரசாதம் கண்ணனுக்கு ரொம்ப பிடிக்கும். நிறைய வெண்ணெய் சேர்த்து தயிர் சேர்த்து பெருமாளுக்கு சமர்ப்பித்தேன். அது ஜலதோசம் பிடிக்காதே என்றார் முதலியாண்டான்.

வேறு என்ன கொடுத்தீர்? என்றார் சுவாமி இராமானுஜர். கண்ணனுக்கு நாவல் பழம் பிடிக்கும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் நாவல் பழம் சமர்ப்பித்தேன். இதுவும் தப்பில்லையே! நாவல் பழம் தான் ஜலதோசம் பிடிக்காதே என்றார் முதலியாண்டான்.

உடனே, சுவாமி இராமானுஜர் கேட்கிறார். இரண்டையும் சேர்த்து சமர்ப்பித்தீரா? என்றார். முதலியாண்டானோ 'ஆமாம். இந்தப் பக்கம் இலையில் தயிர் அன்னம். அந்தப்பக்கம் இலையில் நாவல் பழம் சமர்ப்பித்தேன்' என்றார்.

நீர் அங்கே தான் தவறு செய்திருக்கிறீர் என்றார் சுவாமி இராமானுஜர். நாவல் பழத்தை தனியாக சாப்பிடலாம். தத்யன்னத்தை தனியாகச் சாப்பிடலாம். இரண்டும் சேர்த்து சாப்பிட்டால் ஜலதோசம் பிடித்துக் கொள்ளும் என்றார் சுவாமி இராமானுஜர்.

இப்படி முதலியாண்டான் செய்த தவறுக்கு பெரிய பெருமாளான அரங்கநாதனுக்கு ஜலதோசம் பிடித்துக் கொண்டதாம். உடனே, சுவாமி இராமானுஜர் பதறிப்போய், கருடவாகன பண்டிதர் என்ற வைதியர் சுவாமி இராமானுஜர் காலதேதில் இருந்தார். அந்த வைதியரிடம் விசாரித்து, நன்றாக கஷாயம் சமர்ப்பிக்கச் சொல்லி, அதை மூன்று நாட்கள் சமர்ப்பித்ததனால் பெரிய பெருமாளுக்கு ஜலதோசம் சரியானது.

பரம வேதாந்தி, உலகம் அத்தனையையும் படைத்து, காத்து, பிரம்மாவைப் படைத்து - உலகைக் காப்பவருக்கு ஜலதோசம் பிடித்துக்கொண்டது என்றால், அது ஞானம் முதிர்ந்திருக்கும் பக்தி. அந்த பக்தியினாலே தான் நமக்கு மோட்சம் என்பதை சுவாமி இராமானுஜர் வெளியிட்டார்.

ஆகையால் ஒரே பக்கத்தில் ஞானம். மற்றொரு பக்கத்தில் பக்தி. இந்த இரண்டையும் சேர்ந்து இருப்பவனே இராமானுஜருடைய சிஷ்யன்.

ஆகையால் வறட்டுத்தனமாகவும் பேசக்கூடாது. அதற்காக ஞானமே இல்லாமல் பக்தி மார்க்கம் பற்றியும் பேசக்கூடாது. இதிலிருந்து கனிந்த நிலையினால் தான் நாம் முக்தி அடைகிறோம் என்று சுவாமி இராமானுஜர் தெரிவிக்கிறார்.

ஏனெனில், அத்வைதம் படி பார்த்தால் ஞானத்தினால் தான் மோட்சம். தத்வமஸி என்ற வாக்கியம். அந்த ஞானத்தாலே மோட்சம். 'வாக்குஜன்ய வாக்கியார்த்தம்'. வேதத்தில் ஒரு வாக்கியம் இருக்கிறது. அந்த வாக்கியத்தில் இருந்து நாம் ஒரு அர்த்தம் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த அர்த்தம் தெரிந்தால் மோட்சம் என்கிறார்கள்.

சங்கரர் 'பிரம்மம் ஒன்றே சத்தியம். ஜகம் அத்தனையும் பொய். அதாவது கானல் நீரைப் போன்றது. என்றைக்கு அபரீத ஞானம் ஏற்பட்டுவிடுகிறதோ, பிரம்மாவும் - ஆத்மாவும் ஒன்று, என்பதை என்று நாம் தெரிந்து கொள்கிறோமோ அப்பொழுது தான் மோட்சம் என்பது சங்கரரின் கருத்து.
ஏனெனில் பிரம்மத்திற்கு குணமே கிடையாது என்று சொல்லியிருக்கிறார். பிரம்மத்துக்கே ஞானம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்.